2018-ம் வருடம் மே மாதம் 14-ம் தேதி திங்கட்கிழமை மாலை 4.00மணிக்கு நடைபெற்ற கூட்ட நடவடிக்கையின் உண்மைநகல்:

முன்னிலை: திரு.எல்.குமார்.பி.இ.

தனி அலுவலர், ஆம்பூர் நகராட்சி.

----------

1. இந்நகராட்சியில் திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் நகரில் சேகரமாகும் குப்பைகள் உடனுக்குடன் அகற்றவேண்டி மொத்தமுள்ள 26302 குடியிருப்புகளுக்கு ஏற்கனவே உள்ள 54 எண்ணிக்கை தள்ளுவண்டிகள், 6 எண்ணிக்கை மினி டிப்பர் லாரிகளில் 15300 குடியிருப்புகளில் சேகரிக்கும் திடக்கழிவுகளை தவிர்த்து எனைய 11,002 குடியிருப்புகளில் 400 குடியிருப்புகளுக்கு 1 வாகனம் எனும் விகிதத்தில் 28 எண்ணிக்கையிலான பேட்டரியில் இயங்கும் வாகனம் கொள்முதல் செய்ய ஆகும் மதிப்பீட்டுத் தொகை ரூ.62.72 இலட்சத்திற்கு திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் அரசு மானியம் கோரி நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை-5, அவர்களுக்கு திட்டபிரேரணை அனுப்ப மன்ற நிர்வாக அனுமதி வேண்டி மன்றப்பொருள் வைக்கப்படுகிறது.

**<u>அலுவலககுறிப்பு</u>:-** அரசு மானியமாக திடக்கழிவு மேலாண்மை (SWM) திட்டத்தின் கீழ் நிதி பெற்று பணியினை மேற்கொள்வதற்கு அங்கீகாரம் வழங்கலாம்.

**ந.க.எண்:-** இ1/1193/2016

தீர்மான எண்.11: அலுவலககுறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.

2. இந் நகராட்சியில் 2017-2018ம் ஆண்டு நாடாளுமன்ற உறுப்பினர் உள்ளூார் பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ், கீழ் குறிப்பிட்டுள்ள பணியினை மேற்க்கொள்ள நிர்வாக அனுமதி வழங்கி உத்திரவிடப்பட்டு வரப்பெற்றுள்ள மாவட்ட ஆட்சித்தலைவர், வேலூார் அவர்களின் செயல்முறைகள் உத்திரவு ந.க.எண்.அ2/1191/2017 நாள்28.03.2018-ஐ தகவலுக்கு வைக்கப்படுகின்றது.

| வ. எண் | பணியின் விவரம் | மதிப்பீடு தொகை (ரூபாய் லட்சத்தில்) |
|---|---|---|
| 1. | இந் நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் 40 எண்ணிக்கை எல்.இ.டி.லூாமினார் (80 வாட்ஸ்) விளக்கு மற்றும் பிட்டிங்குகள் மற்றும் டிஸ்பிளே போர்டுகள் சப்ளை செய்து பொருத்துதல். | 8.40 |

மேற்படி பணிக்கு 27.04.2018ம் தேதியன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் வரப்பெற்றுள்ள ஒப்பந்தப் புள்ளிகளின் விவரம் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்பட்டுள்ளது.

| **வ. எண்.** | **ஒப்பந்ததாரர் பெயர் திரு/திருமதி** | **ஒப்பந்தப் புள்ளி சதவீதம்** |
|---|---|---|
| 1. | T.S.சோலார் சிஸ்டம்ஸ், வேலூார். | 0.88% மதிப்பீட்டைவிட குறைவு |
| 2. | V.S.T.ஏஜென்சீஸ், வேலூார். | 0.41% மதிப்பீட்டைவிட அதிகம் |

அலுவலகக்குறிப்பு: அ. பதிவு செய்யலாம்.

ஆ. மேற்குறிப்பிட்டுள்ள பணிக்கு வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் T.S.சோலார் சிஸ்டம்ஸ், வேலூர் கொடுத்துள்ள குறைவான ஒப்பந்தப்புள்ளியை அங்கீகரிக்கலாம்.

இ.திட்டப்பணியின் அவசர அவசியம் கருதி தனி அலுவலர் அவர்களின் முன்அனுமதி பெற்று பணியினை செய்து முடிக்க குறைந்த ஒப்பந்தப்புள்ளிதாரருக்கு பணி உத்திரவு வழங்கியமைக்கு அங்கீகாரம் வழங்கலாம்.

ந.க.எண்.1727/2016/இ1

தீர்மான எண்.12: அலுவலககுறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.

3. இந் நகராட்சியில் வருவாய் நிதியின் கீழ் மேற்க்கொள்ள அங்கீகாரம் வழங்கப்பட்ட கீழ் குறிப்பிட்டுள்ள பணிகளுக்கு 04.05.2018-ம் தேதி அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிகளின் விவரம் கீழ்வருமாறு மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்பட்டுள்ளது.

| வ. எண் | பணியின் விவரம் | மதிப்பீடு தொகை (ரு.இலட்ச த்தில்) | ஒப்பந்தாரர் பெயர் (திரு/திருமதி) | ஒப்பந்தப்புள்ளி சதவீதம் |
|---|---|---|---|---|
| 1. | வார்டு.எண்.36-ல் சாமியார்மடம் 2-வது தெருவில் உள்ள மழைநீர் வடிகால்வாயின் இருபக்க சுவற்றினை உயர்த்தி ஆர்.சி.சி.சிலாப் கொண்டு மூடுதல். | 5.80 | 1.எம்.உதயகுமார்<br><br>2.ஆர்.இசைசெல்வ மூர்த்தி | 0.06% மதிப்பீட்டைவிட குறைவு<br><br>1.10% மதிப்பீட்டைவிட அதிகம் |
| 2 | வார்டு.எண்.23-ல் வாணக்கார கொல்லை 2-வது தெரு மற்றும் தேசிய நெடுஞ்காலை சந்திப்பு பகுதியில் வாணக்கார கொல்லை 2-வது தெருவின் தெற்கு பகுதியில் மழைநீர் வடிகால்வாய் அமைத்தல். | 1.50 | 1.எம்.உதயகுமார்<br><br>2.ஆர்.இசைசெல்வ மூர்த்தி | 0.06% மதிப்பீட்டைவிட குறைவு<br><br>1.20% மதிப்பீட்டைவிட அதிகம் |

அலுவலகக்குறிப்பு:- மேற்க்குறிப்பிட்டுள்ள பணிகளுக்கு வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டைவிட குறைவாக கொடுத்துள்ள திரு.எம்.உதயகுமார் ஒப்பந்ததாரின் ஒப்பந்தப்புள்ளிகளை அங்கீகரிக்கலாம்.

ந.க.எண்.314/2018/இ1

தீர்மான எண்.13: அலுவலககுறிப்பு அங்கீகரிக்கப்பட்டது

4.இந் நகராட்சிக்கு 2018-19-ம் ஆண்டிற்கு தேவையான படிவங்கள்,பதிவேடுகள்,வெள்ளை தாள்கள்,பிரிண்டர்களுக்கான டோனர்கள், அம்மா உணவகத்திற்கான இட்லி, சாம்பார் சாதம், தயிர் சாதம் இரசீதுகள்,கணணி மையம் முப்பிரதி இரசீதுகள் ஆகியவற்றினை வடாற்காடு மாவட்ட சிறுதொழில் கூட்டுறவு அச்சகம் லிட்,வேலூார் (NAPCO LTD,VELLORE) அவர்களிடம் இருந்து தேவைப்படும் பொழுது அவ்வப்போது பணி உத்திரவு வழங்சி அச்சிட்டு பெற்றக்கொள்ளவும்,அதற்காகும் தோராய செலவு தொகை ரு.15.00 இலட்சத்திற்கு(ருபாய்.பதினைந்து இலட்சம் மட்டும்) அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு:- அனுமதிக்கலாம்

(ந.க.எண்.பி3/433/2018)

தீர்மான எண்.14: அனுமதிக்கப்பட்டது

5. இந் நகராட்சியில் குடிநீர் நிதியின் கீழ் எடுத்துக் கொள்ளப்பட்ட கீழ் குறிப்பிட்டுள்ள பணிக்கு 24.04.2018ம் தேதியன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் வரப்பெற்றுள்ள ஒப்பந்தப் புள்ளிகளின் விவரம் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்பட்டுள்ளது.

| வ. எண். | பணியின் விவரம் | மதிப்பீடு தொகை (ருபாய் லட்சத்தில்) | ஒப்பந்ததாரர் பெயர் திரு/திருமதி | ஒப்பந்தப்புள்ளி சதவீதம் |
|---|---|---|---|---|
| 1 | இந்நகராட்சிக்கு சொந்தமான தலைமை நீரேற்று நிலையங்களான சாரங்கல், நரியம்பட்டு, ஆணைமடுகு (மாங்காய் தோப்பு) வண்ணாந்துறை, நதிசீலாபுரம் மற்றும் சாணிக்கணவாய் மேடு ஆகிய நிலையங்களில் உள்ள நீர் உறிஞ்சி கிணறு திறந்த வெளி கிணறு மற்றும் ஆழ்துளை கிணறு, மேலும் நகராட்சி எல்லைக்குட்பட்ட நகராட்சிக்கு சொந்தமான திறந்தவெளி கிணறுகளில் உள்ள மின்மோட்டார் மற்றும் குழாய் வால்வுகளை இயக்குதல். ( மே.2018 முதல் டிசம்பர்.2018 வரை). | 9.96 | 1.ஜி.பிரபாகரன்<br><br>2.ஆர்.இசைசெல்வ மூர்த்தி | 0.05% மதிப்பீட்டைவிட குறைவு.<br><br>1.25% மதிப்பீட்டைவிட அதிகம். |
| 2 | இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட 9 எண்ணிக்கை மேல்நிலை மற்றும் கீழ்நிலை நீர்த்தேக்க தொட்டிகளுக்கு தலைமை நீர்ரேற்றும் நிலையங்கள் மற்றும் வேலூார் கூட்டு குடிநீர் திட்டத்தின் கீழ் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மூலமாக இந்நகராட்சி பகுதிக்கு தினசரி குடிநீர் | 9.96 | 1.ஜி.பிரபாகரன்<br><br>2.ஆர்.இசைசெல்வ மூர்த்தி | 0.05% மதிப்பீட்டைவிட குறைவு.<br><br>1.25% மதிப்பீட்டைவிட |

| | | | | |
|---|---|---|---|---|
| | விநியோகம் மேற்க்கொள்ள நீர்த்தேக்க தொட்டிகளில் நீரேற்றுவதை விநியோகம் செய்ய தேவைப்படும் குடிநீர் குழாய் திருகுநர் (வால்வு ஆப்ரேட்டர்) வால்வுகளை இயக்குதல். (மே.2018 முதல் டிசம்பர்.2018 வரை). | | | அதிகம். |
| 3 | கோடைக்காலத்தில் பொது மக்கள் அதிகம் கூடும் 10 இடங்களில் 10 எண்ணிக்கை சின்டெக்ஸ் டேங்க் (HDPE) மற்றும் இதர உபகரணங்கள் அமைத்து குடிநீர் வசதி செய்தல் | 0.50 | 1.ஜி.பிரபாகரன்<br><br>2.ஆர்.இசைசெல்வ மூர்த்தி | 0.07% மதிப்பீட்டைவிட குறைவு.<br><br>1.20% மதிப்பீட்டைவிட அதிகம். |

**அலுவலகக்குறிப்பு:** மேற்குறிப்பிட்டுள்ள பணிகளுக்கு வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் திரு.ஜி.பிரபாகரன் ஒப்பந்ததாரர் கொடுத்துள்ள குறைவான ஒப்பந்தப்புள்ளியை அங்கீகரிக்கலாம்.

ந.க.எண்.459/2018/இ2

தீர்மான எண்.15: அலுவலககுறிப்பு அங்கீகரிக்கப்பட்டது

6. இந் நகராட்சியில் செயல்பட்டு வரும் அம்மா உணவகத்திற்கு தேவையான மளிகைப்பொருட்கள், அரிசி, பால், காய்கறிகள், சமையல் எரிவாயு உருளைகள் வாங்குதல், பில் புத்தகங்கள் அச்சடித்தல், மகளிர் சுயஉதவி குழுவினருக்கு மாத ஊதியம் வழங்குதல் மற்றும் இதர அத்தியாவசிய செலவினங்கள் ஆகியவற்றை நகராட்சி வருவாய் நிதியில் மேற்கொள்ளவும் அதற்காகும் உத்தேச செலவின தொகை ரூ.40.00 இலட்சத்திற்கும் (ரூபாய்.நாற்பது இலட்சம் மட்டும்) அங்கீகாரம் கோரப்படுகிறது.

அலுவலக குறிப்பு:- அங்கீகாரம் வழய்கலாம். மேற்குறிப்பிட்டுள்ள செலவினங்களை நகராட்சி வருவாய் நிதியில் மேற்கொள்ளவும் அங்கீகாரம் வழங்கலாம்.

ந.க.எண்.சி2/1667/2014

தீர்மான எண்.16: அலுவலககுறிப்பு அங்கீகரிக்கப்பட்டது

7. இந் நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளிலுள்ள தெருக்களில் வசிக்கும் பொது மக்களின் சுகாதாரத்தை பேணிக்காத்திடும் வகையில் கொசுவினால் பரவக்கூடிய காய்ச்சல் மற்றும் தொற்று நோய்களை தடுக்கும் பொருட்டு மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் ஆய்வுக் கூட்டத்தில் வழங்கப்பட்ட அறிவுரைகளின்படி மேற்படி கொசு ஒழிப்பு தடுப்பு நடவடிக்கை மேற்க்கொண்டு மகளிர்குழு

உறுப்பினர்களை கொண்டு மாவட்ட ஆட்சியர் நிர்ணயம் செய்த தினக்கூலி அடிப்படையில் வீடு வீடாக சென்று தேவையற்ற பொருட்களை அப்புறப்படுத்தும் பணி மற்றும் அபேட் கரைசல் ஊற்றி கொசுப்புழு ஒழிப்பு பணி மேற்க்கொள்ளப்பட்டு வருகிறது.

மேற்படி கொசுப்புழு ஒழிப்புப் பணியை தொடர்ந்து மேற்க்கொள்ள நகராட்சிகளின் நிர்வாக ஆணையாளர், சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண்.2511/ஜே1/2017(ம) மாவட்ட ஆட்சித்தலைவர் , வேலூர் அவர்களின் ஆய்வுக் கூட்ட அறிவுரைகள் (ம) துணை இயக்குனர், சுகாதாரப்பணிகள் , திருப்பத்தூர் ஆகியோர் ஆய்வுக் கூட்டத்தில் தெரிவித்துள்ளதற்கிணங்க, மேற்படி பணிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் , வேலூர் அவர்கள் நிர்ணயம் செய்துள்ளவாறு நபர் ஒருவருக்கு ரூ.254/- என்ற தினக்கூலி அடிப்படையில் 65 நபருக்கு கொசுப்புழு ஒழிப்பு பணியாளர்களை கொண்டு பணியை மேற்க்கொள்ளவும் அதற்காகும் செலவினம் ரூ.5.00லட்சம் (ரூபாய் ஐந்து லட்சம் மட்டும்) செலவிடவும் அங்கீகாரம் கோரப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு: அ.அனுமதிக்கலாம்.

ஆ. மேற்படி தொகையை வருவாய் நிதியிலிருந்து மேற்க்கொள்ளவும் அங்கீகரிக்கலாம்.

இ. அவசரஅவசியம் கருதி தனிஅலுவலரின் முன்அனுமதி பெற்று பணியினை மேற்க்கொண்டமைக்கும் அங்கீகாரம் வழங்கலாம்.

ந.க.எண்.176/2014/எச்1

தீர்மான எண்.17: அலுவலககுறிப்பு அங்கீகரிக்கப்பட்டது

8. இந் நகராட்சி பொது சுகாதாரப்பிரிவிற்கு 2018-19ம் ஆண்டிற்க்கு தேவையான கீழ் குறிப்பிட்டுள்ள விவரப்படி பொருட்கள் வாங்குவதற்க்கும், பணிகள் மேற்கொள்வதற்கும் அதற்காகும் தோராய செலவினத் தொகைக்கும் அங்கீகாரம் கோரப்படுகிறது.

| வ.எ. | இனங்களின் விவரம் | தோராய செலவினத் தொகைரூபாய் லட்சத்தில்) |
|---|---|---|
| 1. | தளவாடப் பொருட்கள் வாங்குதல் | 5.00 |
| 2. | சுண்ணாம்புத்தூள் வாங்குதல் | 5.00 |
| 3. | பிளிச்சிங் பவுடர் வாங்குதல் | 5.00 |
| 4. | பினாயில் மற்றும் ஆசிட் வாங்குதல் | 5.00 |
| 5. | சீருடைகள் வாங்குதல் மற்றும் தையற் கூலி வழங்குதல் | 10.00 |
| 6 | காலணிகள், கையுறை, முக உறை, ரெயின் கோட், ஷீ வாங்குதல் | 5.00 |
| 7 | குரங்குகளை பிடித்து காட்டில் விடுதல் | 2.00 |
| 8. | நாய்களை பிடித்து அறுவை சிகிச்சை செய்தல் | 5.00 |
| 9. | பண்றிகளை பிடித்தல் | 1.00 |
| 10. | கொசுப்புழு மற்றும் கொசு ஒழிப்பு மருந்து வாங்குதல் | 20.00 |

| | | |
|---|---|---|
| 11. | பொது சுகாதார வாகனங்களுக்கு வலைகள் வாங்குதல் | 2.00 |
| 12. | கொள்ளை நோய் மருந்து வாங்குதல் | 5.00 |
| 13. | கொசுப்புழு ஒழிப்பு நடவடிக்கை மேற்க்கொள்ள பணியாளர்களை பணிக்கு அமர்த்துதல். | 40.00 |
| 14. | பிறப்பு, இறப்பு, புத்தகங்கள் பைண்டிங் செய்தல் மற்றும் இதர அலுவலக செலவு | 2.00 |
| 15. | ஈக்களை ஒழிக்க மருந்து வாங்குதல் | 15.00 |
| 16. | பொதுசுகாதார பிரிவில் வாகனங்களுக்கு காப்பீடு (ம) வாகனவரி ஆகியவற்றை 2018-2019ம் ஆண்டிற்கு செலுத்துதல் | 5.00 |
| 17. | பொது சுகாதாரப் பிரிவில் உள்ள வாகனத்தில் ஏற்படும் பழுதுகளை பழுதுநீக்கம் செய்தல். | 15.00 |
| 18. | ஜே.சி.பி.மற்றும் சையின் டோஸர் வாகனங்களை வாடகைக்கு அமர்த்துதல் | 5.00 |
| 19. | கொசுப்புகை மருந்து அடிக்கும் இயந்திரங்களை பழுதுநீக்கம் செய்தல் | 5.00 |
| 20. | டெங்கு, சிக்குன் குனியா, மலேரியா பிற தொற்றுநோய் மற்றும் பொது சுகாதாரம் பற்றிய விழிப்புணர்வு மக்களிடையே ஏற்படுத்துதல் | 5.00 |
| 21. | பொதுக்கழிப்பிடங்கள் சுத்தம் செய்தல் | 10.00 |
| 22. | டம்பர் பிளேசர் பின்கள் பழுதுபார்த்தல் | 5.00 |
| 23. | SBM, SWM.PWM குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்துதல் | 5.00 |
| 24 | SBM, SWM.PWM குறித்து திறன் வளர்ப்பு பயிற்சி அளித்தல் (Capacity Building) | 3.00 |
| 25 | பொது சுகாதாரபிரிவு வாகனங்களுக்கு டயர் டியூப் வாங்குதல் | 5.00 |

அலுவலக குறிப்பு:- அ.மேற்குறிப்பிட்ட இனங்களை நடைமுறை விதிமுறைகளின்படி அரசு அங்கிகாரம் பெற்ற நிறுவனங்கள் (அ) உள்ளூர் (அ) வெளிவூர் நிறுவனங்கள் ஆகியவற்றில் ஒப்பந்தப்புள்ளிகள் பெற்று வாங்கிக்கொள்ள அங்கீகாரம் வழங்கலாம்.

(ஆ) மேற்குறிப்பிட்ட இனங்களுக்கு ஆகும் செலவீனத்தொகையை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து வழங்கவும் அங்கிகாரம் வழங்கலாம்.

ந.க.எண்.526/2018/எச்1

தீர்மான எண்.18: அலுவலககுறிப்பு அங்கீகரிக்கப்பட்டது

ஓம்/- இல.குமார்,
தனி அலுவலர்,
ஆம்பூர் நகராட்சி

/உண்மைநகல்/

தனி அலுவலர்,
ஆம்பூர் நகராட்சி

2018-ம் வருடம் மே மாதம் 18-ம் தேதி வெள்ளிக்கிழமை மாலை 3.30மணிக்கு நடைபெற்ற கூட்ட நடவடிக்கையின் உண்மைநகல்:

முன்னிலை: திரு.எல்.குமார்.பி.இ.
தனி அலுவலர், ஆம்பூர் நகராட்சி.

----------

1. இந்நகராட்சியில் மத்திய அரசு திட்டமான அம்ருத் திட்டத்தின் கீழ் பாதாள சாக்கடை திட்டம் செயல்படுத்த ரூ.165.55கோடி மதிப்பீட்டில் நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது. மேற்படி திட்டம் தொடர்பாக நகராட்சிகளின் நிர்வாக ஆணையர் அவர்கள் ஆய்வுக்கூட்டம் 11.05.2018-ம் தேதியன்று நடத்தப்பட்டதில் தற்போதைய மதிப்பீட்டில் உள்ள பிரதான நீர் உந்து நிலையத்திலிருந்து (MPS) 8கி.மீ.தொலைவில் அமைந்துள்ள சோலூர் கிராமத்தில் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையத்தை அமைப்பதற்கு பதிலாக பிரதான நீர்உந்து நிலையம் (MPS) அமைக்க கஸ்பா.அ.பகுதியில் தேர்வு செய்யப்பட்டுள்ள தனியாருக்கு சொந்தமான அதே இடத்தில் உள்ள 2.785ஏக்கர் இடத்தில் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் அமைத்தால் 8கி.மீ.தூரம் பிரதான நீர்உந்து பைப்புகள் அமைப்பதற்கான செலவினத் தொகை ரூ.16.00கோடி மீதம் ஆகும் என்றும் ஆண்டு பராமரிப்பு செலவினம் ரூ.1.00கோடி வரை குறையும் என நகராட்சிகளின் நிர்வாக ஆணையர் அவர்கள் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதற்கிணங்க திரு.P.கிஷண்லால் என்பவருக்கு சொந்தமான கஸ்பா.எ.பகுதியில் உள்ள ஆம்பூர் நகரம் வார்டு.A, பிளாக்.3, நகரளவு எண்.1/1 பழைய சர்வே எண்கள்.144/1A, 144/2A, 144/2B, 144/3, 145 உள்ள 1,21,327 சதுர அடி (2.785 ஏக்கர்) இடத்தை மாவட்ட ஆட்சித்தலைவர், வேலூர் அவர்களது தனிநபர் பேச்சுவார்த்தை நாள் 10.05.2018 அன்று நிர்ணயித்துள்ள ஒரு சதுர அடிக்கான விலை ரூபாய்.452.25/- வீதம் மொத்த சதுர அடி 1,21,327 வழங்க திரு.கிஷன்லால், ஆம்பூர் என்பவர் 12.05.2018ம் தேதியன்று உடன்படிக்கையில் சம்மதத்தை தெரிவித்துள்ளார்.அதன் விவரம் கீழ்வருமாறு.

| | |
|---|---|
| நில மதிப்பு | 1,21,327 ச.அ X 452.25 ரூ<br>= 5,48,70,136/- |
| பத்திரபதிவு கட்டணம் 4% | 21,94,806/- |
| **மொத்தம்** | **5,70,64,941/-** |

எனவே, மேற்படி இடத்தினை நகராட்சி பெறவும், அதற்காகும் செலவினத் தொகைக்கு நகராட்சிகளின் நிர்வாக ஆணையாளர், சென்னை அவர்களிடம் மூலதன மானிய நிதி மானியம் பெற்று கிரையம் பெற அங்கீகாரம் கோரப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு:**

1. மேற்படி இடத்தினை பெறுவதால் மதிப்பீட்டு தொகையில் ரூ.16.00கோடி குறைவதாலும், ஆண்டு பராமரிப்பு செலவினம் ரூ.1.00கோடி வரை குறையும் என எதிர்ப்பார்க்கப்படுவதாலும், மேற்படி இடத்தினை பெற அங்கீகாரம் வழங்கலாம்.

2. மேற்படி திட்டப்பணியின் அவசியம் கருதி, மேற்கண்ட இடத்தில் STP அமைக்கும் பணியினை மேற்க்கொள்ள வேலூர் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்திற்கு அனுமதி வழங்க அங்கீகரிக்கலாம்.

ந.க.எண்.1742/2015/இ2

தீர்மான எண்.19 அலுவலககுறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.

2. இந்நகராட்சியில் வேலூர் கூட்டு குடிநீர் திட்டத்தின் கீழ் ரூ. 95.28கோடி மதிப்பீட்டில் பணிகள் ஆரம்பிக்கப்பட்டு முழுவதுமாக நிறைவு செய்யப்பட்டு டிசம்பர் 2015 அன்று மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் காணொளி காட்சி மூலம் திறந்து வைக்கப்பட்டு, பொதுமக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வரப்பட்டுள்ளது. இந்த குடிநீர் அபிவிருத்தி திட்டத்தின் மூலம் தினசரி 9.40 மில்லியன் லிட்டர் வீதமும் மற்றும் நகராட்சிக்குச் சொந்தமான நீரேற்று நிலையத்திலிருந்து தினசரி 0.80 மில்லியன் லிட்டர் ஆக மொத்தம் 10.20 மில்லியன் லிட்டர் பெறப்பட்டு நாளொன்றுக்கு நபர் ஒருவருக்கு 84.56லிட்டர் வீதம் குடிநீர் வழுஙகப்பட்டு வருகிறது. மேலும், இந்நகராட்சியில் 18563 சொத்து வரி கேட்புகள் உள்ளன. மேற்படி கேட்புகளில் இந்நாள் வரை 9106 குடிநீர் இணைப்புகள் வழங்கப்பட்டுள்ளது. அம்ருத் திட்டத்தின் கீழ் 13300 குடிநீர் இணைப்புகள் வழங்கும் பணி நடைபெற்று வருகிறது. மீதமுள்ள வீட்டு வரி விதிப்புகளின் விகிதாசார படி 3000 புதிய குடிநீர் இணைப்புகளை ஏற்கனவே பதிக்கப்பட்டுள்ள பகிர்மான குழாயில் இணைப்புகள் வழஙக மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. மேற்படி பணிகளை மேற்கொள்ளும் பொருட்டு திட்ட மதிப்பீடு ரூ.100.00 இலட்சத்திற்கு தயார் செய்யப்பட்டுள்ளது. மேற்படி தொகையினை அரசு முழு மானியமாக ஒதுக்கீடு செய்ய வேண்டி நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை–5 அவர்களை கோர அங்கீகாரம் கோரப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு:-**

1. அங்கீகாரம் வழஙகலாம்.
2. அரசு முழு மான்யம் நிதிகோரி திட்டப்பிரேரணை அனுப்ப அஙகீகரிக்கலாம்.

ந.க.எண்.இ2/ 586/2018

தீர்மான எண்.20 அலுவலககுறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.

3. நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையின் அரசாணை (நிலை) எண்.109 நாள்.29.8.2016-ல் இந்நகராட்சயில் அம்ருத் திட்டத்தின் கீழ் ருபாய்.50.90 கோடி மதிப்பீட்டில் குடிநீர் விநியோகம் மேம்படுத்துதல் திட்டத்தினை செயல்படுத்த நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது. மேற்படி திட்டமானது தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மூலம் செயல்படுத்தப்பட்டு வருகிறது மேற்படி திட்டத்தின் கீழ் இந் நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் ஆறு இடங்களில் மேல்நிலை நீர்த்தேக்க தொட்டிகள் அமைக்க உத்தேசிக்கப்பட்டு ஐந்து இடங்களில் மேல்நிலை நீர்த்தேக்க தொட்டிகள் அமைத்தல் பணிகள் நடைபெற்று வருகிறது.

வார்டு எண்.1,2,3,மற்றும்4 ஆகிய பகுதிகளுக்கு குடிநீர் விநியோகம் செய்ய 12.50 இலட்சம் லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்த்தேக்க தொட்டி அமைக்க தேவையான நகராட்சிக்கு

சொந்தமான இடம் இல்லாததால் வருவாய்துறைக்கு சொந்தமான இடம் தேர்வு செய்யப்பட்டு நகராட்சிகளின் நிர்வாக மண்டல இயக்குனர் வேலூர் அவர்களின் மூலமாக மாவட்ட ஆட்சித்தலைவர், வேலூர் அவர்களுக்கு அனுப்பிவைக்கப்பட்டது. மேற்படி தேர்வு செய்யப்பட்ட சோமலாபுரம் பகுதியில் உள்ள ஆதிதிராவிடர் மயானம் இடம் நகராட்சிக்கு வழங்க இயலாது என பார்வை-2ல் காணும் மாவட்ட ஆட்சித்தலைவர், வேலூர் அவர்களது கடிதத்தில் தெரிவித்துள்ளார். மேற்கண்ட இடத்திற்கு மாற்றாக கஸ்பா.அ பகுதியில் அமைந்துள்ள திரு.P.கிஷண்லால் என்பவருக்கு சொந்தமான வார்டு.எண்.A, பிளாக் எண்.3, நகரளவு எண்.1/1, பழைய சர்வே எண்.144/1எ நிலம் தேர்வு செய்யப்பட்டு இடத்திற்க்கான விலை நிர்ணயம் செய்து தரக் கோரி மாவட்ட ஆட்சித்தலைவர், வேலூர், அவர்களை கோரப்பட்டது. பார்வை-5-ல் காணும் மாவட்ட ஆட்சித்தலைவர், வேலூர் அவர்களது தனிநபர் பேச்சுவார்த்தையில் கீழ்கண்டவாறு விலை நிர்ணயம் செய்யப்பட்டு உத்திரவிடப்பட்டுள்ளது.

| விபரம் | தொகை |
|---|---|
| நில மதிப்பு ச.அ. ஒன்றுக்கு ரூ452.25 | 17847 ச.அ.X ரூ452.25<br>= **ரூ 80,71,306.00** |
| பத்திரபதிவு கட்டணம் 4% | **ரூ 3,22,852.24** |
| **மொத்தம்** | **ரூ 83,94,158.00** |

மேற்கண்ட இடத்தினை கிரையமாக பெற நகராட்சியில் போதிய நிதி இல்லாததால் மேற்படி இடத்தினை பெற ஆகும் செலவின தொகை **ரூ83,94,158/-**இ மூலதன மானிய நிதியிலிருந்து வழங்க நகராட்சி நிர்வாக ஆணையாளர், சென்னை அவர்களை கோர அங்கீகாரம் கோரப்படுகிறது.

அலுவலக குறிப்பு:-அங்கீகாரம் வழங்கலாம்.

ந.க.எண்.1741/2015/எப்.1

தீர்மான எண்.21 அலுவலககுறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.

4. இந் நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு.எண்.32-ல் உள்ள லட்சுமி நகர் முதல் தெருவில் இருபுறமும் மழைநீர் வடிகால்வாய் இல்லாமையால் மழைநீர் செல்லாமல் சாலையில் தேங்கி நின்று விடுகிறது.இதனால் பொதுமக்களுக்கும், போக்குவரத்திற்கும் மிகவும் இடையூறாக உள்ளது.எனவே, மேற்படி சாலையில் இருபுறமும் மழைநீர் வடிகால்வாய் அமைத்து சிறுபாலம் கட்டவும் அதற்காகும் மதிப்பீடு தொகை ரூ.8.00 இலட்சத்திற்கும் (ரூபாய்.எட்டு லட்சம் மட்டும்) அங்கீகாரம் கோரப்படுகிறது.

அலுவலக குறிப்பு:-அ.அங்கீகாரம் வழங்கலாம். மேற்குறிப்பிட்டுள்ள பணியை வருவாய் நிதியின் கீழ் மேற்க்கொள்ள அங்கீகாரம் வழங்கலாம்.

ஆ.அவசர அவசியம் கருதி தனிஅலுவலரின் முன்அனுமதி பெற்று மேற்படி பணிக்கு ஒப்பந்தப்புள்ளிகள் கோரியமைக்கும் அங்கீகாரம் வழங்கலாம்.

ந.க.எண்.313/2018/இ1

தீர்மான எண்.22 அலுவலககுறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.

5.தேசிய நெடுஞ்சாலை துறைக்கு சொந்தமான ஆம்பூர் - வாணியம்பாடி (NH48)ல் L.S.உள்ள 68.220KM கூடி 68.580 (LHS-70m RHS-360m) சாலையின் இருபுற ஓரத்திலும் 68.220KM (69/1)ல் உள்ள சிறுபாலத்தின் குறுக்கிலும் குழாய் பதிக்கும் பணியினை 480மீ நீளத்திற்கு ஆம்பூர் நகராட்சி அம்ருத் திட்டத்தின் கீழ் குழாய்கள் பதிக்கும் பணியினை தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மூலம் மேற்கொள்ளவும், எதிர் வரும் காலத்தில் மேற்கண்ட பகுதியில் பதிக்கப்பட்டுள்ள குழாய்கள் மாற்றி அமைக்க நேரிடும் பட்சத்தில் ஏற்படும் செலவினத் தொகையினை நகராட்சி நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ளவும் அங்கீகாரம் கோரப்படுகிறது.

அலுவலக குறிப்பு:- அங்கீகாரம் வழங்கலாம்.

ந.க.எண்.1742/2015/இ2

தீர்மான எண்.23 அங்கீகரிக்கப்பட்டது.

6. இந் நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் கீழ் குறிப்பிட்டுள்ள பணிகளை மேற்க்கொள்ளவும் அதற்காகும் மதிப்பீடு தொகைகளுக்கும் அங்கீகாரம் கோரப்படுகின்றது.

| வ. எண். | பணியின் விவரம் | மதிப்பீடு தொகை (ரூபாய் லட்சத்தில்) |
|---|---|---|
| 1 | வார்டு.எண்.2-ல் கூபா மசூதி 5-வது தெரு மற்றும் குறுக்கு தெருவிற்கு சிறுபாலங்களுடன் கூடிய மழைநீர் வடிகால்வாய் கட்டுதல் | 10.00 |
| 2 | வார்டு.எண்.36-ல் இந்திரா நகர் 5-வது தெருவில் இருபுறமும் மழைநீர் வடிகால்வாய் கட்டுதல் மற்றும் சிமெண்ட்தளம் அமைத்தல். | 7.75 |
| 3 | வார்டு.எண்.5-ல் துரைசாமி ராஜா தெரு மற்றும் துரைசாமி ராஜா 2-வது தெரு சந்திப்பு மற்றும் சின்னகம்மார தெரு சந்திப்பில் சிறுபாலம் கட்டுதல். | 7.00 |
| 4. | வார்டு.எண்.2-ல் கூபா மசூதி 1-வது தெருவின் மத்தியில் புதியதாக மழைநீர் வடிகால்வாய் கட்டுதல் மற்றும் நகராட்சி பொது கிணற்றின் சுற்றுச்சுவரினை உயர்த்துதல். | 2.00 |

**அலுவலகக்குறிப்பு:** 1. அங்கீகாரம் வழங்கலாம். மேற்கண்ட பணிகளுக்கான செலவினத்தை வருவாய் நிதியின் கீழ் மேற்க்கொள்ளவும் அங்கீகரிக்கலாம்.
2. மேற்கண்ட பணிகளுக்கு தனிஅலுவலரின் முன்அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளிகள் கோர நடவடிக்கை மேற்க்கொண்டமைக்கு அங்கீகரிக்கலாம்.
ந.க.எண்.504/2018/இ1

தீர்மான எண்.24 அங்கீகரிக்கப்பட்டது.

7. இந் நகராட்சிக்கு செலுத்தப்பட வேண்டிய சொத்துவரி, குடிநீர் கட்டணம், தொழில்வரி, வரியில்லா இனங்கள் ஆகியவற்றின் நிலுவை மற்றும் நடப்புத் தொகையினை உடனடியாக செலுத்தக்கோரி பொதுமக்களுக்கு தெரியப்படுத்தும் வகையில் ஒலி பெருக்கி வைத்து ஆட்டோ மூலம் விளம்பரம் செய்ய 27.02.2018-ம் தேதி விலைப்புள்ளிகள் கோரப்பட்டதில் வரப்பெற்ற விலைப்புள்ளிகளின் விவரம் மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண். | ஆட்டோ ஓட்டுனர் பெயர் மற்றும் முகவரி திருவாளர்கள் | விலைப்புள்ளி தொகை நாள் ஒன்றிற்கு ரூ. |
|---|---|---|
| 1 | வி.முத்து த/பெ.வனராஜ்<br>புதிய பஸ் நிலையம், கட்டைமேடு, ஆம்பூர். | 1450/ |
| 2 | பி.மதுரை த/பெ.பாலு<br>புதிய பஸ் நிலையம், கட்டைமேடு, ஆம்பூர். | 1400/- |
| 3 | வி.மணிகண்டன் த/பெ.துரைராஜ்<br>கட்டைமேடு, ஆம்பூர். | 1500/- |

**அலுவலகக்குறிப்பு:** அ. அனுமதி வழங்கலாம்.

ஆ. வரிவசூல் பணியின் அவசியம் கருதி, வரிசை எண்.2ல் கண்டுள்ள குறைவான விலைப்புள்ளி அளித்துள்ள திரு. பி.மதுரை த/பெ.பாலு ஆம்பூர் என்பவர் கொடுத்துள்ள குறைவான விலைப்புள்ளியை ஏற்று வேலை உத்திரவு வழங்கவும் அதற்காகும் தோராய செலவினம் ரூ.40,600/- (ருபாய் நாற்பதாயிரத்து அறு நூறுமட்டும்) தொகை வழங்க அனுமதி வழங்கலாம்.

இ.தனிஅலுவலர் அவர்களின் முன்அனுமதிபெற்று விலைப்புள்ளிகள் கோர நடவடிக்கை எடுத்தமைக்கும் அனுமதி வழங்கலாம்.

ந.க.எண். 51/2018/எ1

தீர்மான எண்.25 அலுவலககுறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.

**8.** இந்நகராட்சி ஒப்பந்தாரர் திரு.ஜி.சேகர் என்பவர் **2011–2012**ம் ஆண்டில் மேற்கொண்ட கீழ் கண்ட பணிகளுக்கு பிடித்தம் செய்யப்பட்ட பொறுப்பு தொகையினை(security Deposit) காலம்கடந்த வைப்பு நிதி கணக்கில் வரவாக்கப்பட்டுள்ளது .

1. Providing C.C.Payment at Kamarajarsalai 4th &5th street -Rs. **8750/–**
2. Providing C.C.Pavment at Jawahar Nagar in ward No.**36** –Rs.**10000/–**

மேற்கண்ட ஒப்பந்தரார் மேற்கண்ட பணிகளுக்கு வழங்க வேண்டிய பொறுப்பு தொகையினை வழங்க விண்ணப்பம் செய்துள்ளார் .திரு.ஜி.சேகர்,ஒப்பந்தாரருக்கு காலம் கடந்த வைப்பு தொகை ரூ.**18750/–**யை வழங்க அனுமதி கோரப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு</u>

அனுமதிக்கலாம்.

ந.க.எண்.**438/18/**அ**4**

தீர்மான எண்.26 அனுமதிக்கப்பட்டது.

9. இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் இயங்கிவரும் கடைகள், பள்ளிகள், கல்லூரிகள் (ம) தொழில்நிறுவனங்ககள் ஆகியவற்றிற்கு 5 ஆண்டுகளுக்கு ஒரு முறை தொழில்வரியினை 25% முதல் 35% சதவிகிதம் வரை வரி உயர்வு செய்யப்பட்டு வசூலிக்க நகராட்சிகளின் நிர்வாக இயக்குனர், சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண்.12503/2018/ஆர்1, நாள் 21.5.2018-ல் தெரிவிக்கப்பட்டுள்ளது.எனவே, கீழ்க்கண்டவாறு தொழில்வரி கேட்பினை 30% உயர்வு செய்து நிர்ணயம் செய்ய அனுமதி கோரப்படுகிறது.

| ஆறுமாதத்திற்கு மொத்த வருமானம் ரூ. | ஒவ்வொரு அரையாண்டிற்கும் செலுத்த வேண்டிய வரி தொகை ரூ. | |
|---|---|---|
| | 30.09.2018 வரை இருந்த தொழில்வரி | திருத்திய விகிதப்படி தொழில்வரி 1.10.2018 முதல் 30 சதவிகிதம் |
| 21,000/-க்கு 30,000/-முடிய | 122/- | 159/- |
| 30,000/-க்கு 45,000/-முடிய | 309/- | 402/- |
| 45,000/-க்கு 60,000/-முடிய | 610/- | 793/- |
| 60,000/-க்கு 75,000/-முடிய | 919/- | 1195/- |
| 75,000/-க்கு மேல் | 1219/- | 1250/- |

அலுவலகக்குறிப்பு:மேற்கண்ட பட்டியலில் கண்டுள்ளவாறு தொழில்வரி கேட்பினை 30% உயர்வு செய்து நிர்ணயம் செய்ய அனுமதிக்கலாம்.
ந.க.எண்.654/2018/அ2

தீர்மான எண்.27 அலுவலககுறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.

10. ஆம்பூர் நகராட்சிக்கு சொந்தமான சான்றோர்குப்பம் நகராட்சி நடுநிலைப் பள்ளியின் தென்மேற்கு பகுதியில் உள்ள வகுப்பறை கட்டிடத்தின் பழுதடைந்துள்ள ஆர்.சி.சி கூரை சிலாப் மற்றும் ஆர்.சி.சி கூரை சிலாபிலிருந்து 1.00 மீட்டர் வரை கீழ்புறமாக உள்ள கட்டிடத்தினையும் பழுதடைந்துள்ள ஜன்னல் மற்றும் வாசற்கால்கள் ஆகியவற்றை அப்புறப்படுத்த அங்கீகாரம் கோரப்படுகிறது.

அலுவலக குறிப்பு:- பள்ளி மாணவ, மாணவிகளின் நலன் கருதி மேற்படி பழுதடைந்துள்ள கட்டிடத்தை பொது ஏலத்தில் விட்டு அப்புறபடுத்த அங்கீகாரம் வழங்கலாம்.

ந.க.எண்.1442/2018/இ1

தீர்மான எண்.28 அலுவலககுறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.

11. இந் நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு.எண்7-ல் கெங்காபுரம் பகுதியில் உள்ள பொதுகழிப்பிடம் மற்றும் வார்டு.எண்.33-ல் ராமு தெருவின் கடைசியில் உள்ள பொதுகழிப்பிடம் ஆகியவை மிகவும் பழுதடைந்து கீழே விழும் நிலையில் உள்ளதால் பொதுமக்களின் பயன்பாட்டிற்கு உட்படுத்தபட இயலாத நிலையில் உள்ளதாலும், விஷஜந்தக்கள் நடமாட்டம் அதிகமாக உள்ளதாலும் பொதுமக்களின் பாதுகாப்பு கருதி மேற்படி இரண்டு பொது கழிப்பிடங்களை நகராட்சி ஜே.சி.பி வாகனத்தை கொண்டு இடித்து அப்புறப்படுத்திட அங்கீகாரம் கோரப்படுகிறது.

அலுவலக குறிப்பு:-அங்கீகாரம் வழங்கலாம்.

ந.க.எண்.519/2018/இ1

தீர்மான எண்.29 அங்கீகரிக்கப்பட்டது.

12. இந் நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு.எண்7-ல் கேவிந்தாபுரம் பகுதியில் வட்டாட்சியர் அலுவலகம் அமைந்துள்ள சாலையில் இருபுறமும் தாங்கு சுவர் அமைத்து சிமெண்ட் சாலை அமைக்கவும் அதற்காகும் மதிப்பீடு தொகை ரூ.9.75 இலட்சத்திற்கும் (ரூபாய்.ஒன்பது லட்சத்து எழுபத்தைந்தாயிரம் மட்டும்) அங்கீகாரம் கோரப்படுகிறது.

அலுவலக குறிப்பு:-அ.அங்கீகாரம் வழங்கலாம். மேற்குறிப்பிட்டுள்ள பணியை வருவாய் நிதியின் கீழ் மேற்க்கொள்ள அங்கீகாரம் வழங்கலாம்.
ந.க.எண்.288/2018/இ1
தீர்மான எண்.30 அலுவலககுறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.

13. இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் SBM – SWM திட்டத்தில் குப்பைகளை பிரித்து வாங்குவது குறித்து பொது மக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்தும் பொருட்டு நோட்டீஸ் மற்றும் 10X10 ஆங்கிலுடன் கூடிய பேனர் சப்ளை செய்யும் பணிக்கு ஆகும் செலவு தொகை ரூ.44000/-க்கு (ரூபாய் நாற்பத்து நான்காயிரம் மட்டும்) அங்கீகாரம் கோரப்படுகிறது.மேற்படி பணிக்கு 10.5.2018 தேதியன்று விலைப்புள்ளிகள் கோரப்பட்டதில் கீழ் குறிப்பிட்டுள்ள விவரப்படி விலைப்புள்ளிகள் வரப்பெற்றதை பார்வைக்கும்,முடிவிற்கும் வைக்கப்பட்டள்ளது.

| வரிசை எண் | பெயர் மற்றும் முகவரி | விபரம் (எண்ணிக்கை) | தொகை (ரூ) |
|---|---|---|---|
| 1. | R.உமாபதி.<br>Annai printers,44 PMS Kollai,Ambur | 10 X 10 ஆங்கிள் + பேனர் 1<br>Two Colour Notice – 1000<br>Single Colour Notice - 1000 | 4000<br>1200<br>800 |
| 2. | S.Justin Prabusam<br>83,Panakkara street,<br>Ambur | 10 X 10 ஆங்கிள் + பேனர் 1 | 4300 |

| | | | |
|---|---|---|---|
| | | Two Colour Notice – 1000<br>Single Colour Notice - 1000 | 1375<br>820 |
| 3. | நிலா டிஜிட்டல்,<br>28,2 வது தெரு,ஆனந்தா நகர்,பைபாஸ் ரோடு,ஆம்பூர் | 10 X 10 ஆங்கிள் + பேனர் 1<br>Two Colour Notice – 1000<br>Single Colour Notice - 1000 | 4500<br>1500<br>850 |

அலுவலக குறிப்பு :(அ) அவசர அவசியம் கருதி வரப்பெற்ற விலைப்புள்ளிகளில் குறைந்த விலைப்புள்ளி கொடுத்துள்ள வரிசை எண் 1 ல் கண்டுள்ள நிறுவனத்திற்கு தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று பணி உத்திரவு வழங்கி பண் மேற்கொண்டமையை மன்றம் அனுமதிக்கலாம்.

(ஆ) மேற்படி ரூ.44000/- செலவு தொகையை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்: 637/2018/எச்1)

தீர்மான எண்.31 அலுவலககுறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.

ஒம்/- இல.குமார்,
தனி அலுவலர்,
ஆம்பூர் நகராட்சி

/உண்மைநகல்/

தனி அலுவலர்,
ஆம்பூர் நகராட்சி